02.03.2017 மாலை 6.00 மணி அளவில் தேவார திருமுறை இன்னிசை கச்சேரியும் இரவு 9.00 மணி அளவில் தென்னக பண்பாட்டு மையம் மற்றும் கலை பண்பாட்டுத்துறை தஞ்சாவூர் வழங்கும் கலைநிகழ்ச்சி நடைபெறும்.

**அருள்மிகு ஆபத்சகாயேஸ்வரசுவாமி திருக்கோயில்**
**(குருபரிகாரஸ்தலம்) ஆலங்குடி- 612 801**
**மாசி மகா குருவார தரிசன விழா**
**குருவருள் பெறுக! வளமுடன் வாழ்க!**

திரு / திருமதி ______________________________
அவர்கள்
______________________________
______________________________
______________________________

| | | |
|---|---|---|
| ஆலங்குடி குருபகவான் சிறிய படம் | ரூ. | 3.00 |
| ஸ்தல புராண புத்தகம் | ரூ. | 15.00 |
| 6X4 உட்லேமினேஷன் படம் | ரூ. | 20.00 |
| 8X6 உட்லேமினேசன் படம் | ரூ. | 40.00 |

குறிப்பு - இவ்விசேஷத்திற்கு கொண்டு வரும் அபிஷேக சாமான்கள் இதர காணிக்கை பொருட்கள் மேற்படி ஆலய சீட்டு விற்பனை நிலையத்தில் கொடுத்து ரசீது பெற்றுக் கொள்ள வேண்டுகிறோம்.

கும்பகோணம் To மன்னார்குடி பேருந்து வழித்தடத்தில் ஆலங்குடி உள்ளது.
திருவிழாவை முன்னிட்டு சிறப்பு பேருந்துகள் இயக்கப்படுகின்றன

உ
சிவமயம்

# அருள்மிகு ஆபத்சகாயேஸ்வரசுவாமி திருக்கோயில்

(குருபரிகார ஸ்தலம்)

ஆலங்குடி – 612 801, வலங்கைமான் வட்டம், திருவாரூர் மாவட்டம்
Phone : 04374 – 269407



## மாசி மகா குருவார விழா
# அழைப்பிதழ்

2017 ஆம் ஆண்டு 1426 ஆம் பசலி

3- வது வியாழன் சிறப்பு மகா குருவாரம் 02.03.2017

4- வது வியாழன் 1008 சங்காபிஷேகம் 09.03.2017

உ

அருள்மிகு கலங்காமற் காத்த விநாயகர் துணை

ஆலமர் செல்வன் அடிமலர் போற்றி

# அருள்மிகு ஏலவார்குழலி உடனுறையும் அருள்மிகு ஆபத்சகாயேசுவர சுவாமிக்கும் அருள்மிகு குரு தெட்சிணாமூர்த்தி சுவாமிக்கும் சிறப்பு அபிஷேகம்

# பஞ்சமுக அர்ச்சனையுடன் மகா குருவார தரிசனம்

அருள்மிகு குரு தெட்சிணாமூர்த்தி துதி

கல்லாலி ன் புடையமர்ந்து நான்மறை யாறங்கமுதற் கற்றகேள்வி
வல்லார்கள் நால்வருக்கும் வாக்கிறந்த பூரணமாய் மறைக்கப் பாலாய்
எல்லாமா யல்லாதுமா யிருந்ததனை யிருந்தபடி யிருந்துகாட்டி
சொல்லாமற் சொன்னவரை நினையாமல் நினைந்துபவத் தொடக்கை வெல்லாம

திருஞானசம்பந்த மூர்த்தி தேவாரம்

சீரார் கழலே தொழுவீ ரிதுசெப்பீர்
வாரார் முலை மங்கையொடு முடனாகி
ஏரார்இரும் பூளையிடங்கொண்ட யீசன்
காரார் கடனஞ் சமுதுண்ட கருத்தே!

சிறப்பு மிக்க இத்திருக்கோயில், காவிரி நதியின் தென்கரையில் ஒரு கல் தூரத்தில் அமைந்துள்ளது. சீரும் சிறப்பும் பெற்றது. தேவர்கள் பாற்கடலை கடைந்தபோது ஏற்பட்ட நஞ்சினால் அவதியுற்று ஆண்டவனை வழிபட சிவபெருமான் ஆலகால நஞ்சை இத்தலத்தில் குடித்து காத்தமையால் இவ்வூருக்கு ஆலங்குடி எனவும் இறைவனுக்கு ஆபத்சகாயர் எனவும் பெயர். தேவர்களுக்கு நேர்ந்த இடுக்கண்களைத் களைந்து காத்தமையினால் இத்தல வினாயகருக்கு கலங்காமற் காத்த வினாயகர் என்று பெயர். அம்பிகை இத்தலத்தில் தவம் செய்து திருமணம் செய்து கொண்ட சிறப்பை உடையது. ஆதிசங்கர் இத்தல குருபகவானை தரிசித்து சிவஞானம் பெற்றார். இந்திரன், விசுவாமித்திரர், சுகபிரும்ம மகரிஷி அகஸ்தியர் முதலானோரால் வழிபட்ட சிறப்புடையது. திருநாவுக்கரசர், திருஞானசம்பந்தர் முதலானோர் பாடல் பெற்ற சிறப்புடையது. ஒவ்வொரு வியாழக்கிழமையும் ஆயிரக்கணக்கான மக்கள் இத்திருக்கோயிலைச் சுற்றியுள்ள அமிர்த புஷ்கரணியில் நீராடி இறைவனை தரிசித்து குருடு, செவிடு, பிணி நீங்கியும், புத்திர பாக்கியம் பெற வணங்கிச் சென்றும் பலன் அடைகிறார்கள். திருக்கோயிலில் அருள்மிகு ஏலவார்குழலி அம்மை, கொடிமரம் மற்றும் எட்டுதிசை பாலகர்களுடன் கூடிய வெளிப்பிரகாரத்தை 3 முறை வலம் வந்தும், 24 நெய் தீபம் வெளிப்பிரகாரத்தில் ஏற்றியும் பேறு பெறுகின்றனர். இந்த சிறப்பு வாய்ந்த இத்தலத்தில் வீற்றிருந்து அருள்பாலித்து வரும்

## அருள்மிகு குருபகவானுக்கும்,அருள்மிகு ஏலவார் குழலி சமேத அருள்மிகு ஆபத்சகாயருக்கும்

நிகழும் ஸ்ரீ துன்முகி வருடம் மாசி மாதம் 18 ஆம் நாள் (02.03.2017) வியாழக்கிழமை அசுவதி நட்சத்திரம் கூடிய சுபயோக சுபதினத்தில் அருள்மிகு கலங்காமற் காத்த விநாயகர், அருள்மிகு குருபகவான், அருள்மிகு ஏலவார்குழலி சமேத அருள்மிகு ஆபத்சகாயேஸ்வர சுவாமி மற்றும் சுப்பிரமணிய சுவாமி ஆகிய சன்னதிகளில் நிகழ்ச்சி நிரலில் கண்ட விபரப்படி பஞ்சமுக அர்ச்சனை நடைபெற உள்ளது.

மேற்படி பஞ்சமுக அர்ச்சனையில் கீழ்கண்ட இராசி நேயர்கள் கலந்து கொண்டு குருவருள் பெறுவது நலம் பயக்கும்

# மேஷம், மிதுனம், கடகம், கன்னி, துலாம், தனுசு, கும்பம்

மேலும், இதர இராசி நேயர்களும் தங்களது பெயர், இராசி, நட்சத்திரம் ஆகியவற்றை எழுதி பஞ்சமுக, சகஸ்ரநாம அர்ச்சனை செய்து பேறு பெறலாம். கட்டணம் ரூ 400/- (ரூபாய் நானூறு மட்டும்) செலுத்தி அருள்மிகு குருபகவான் அருட்பிரசாதம் பெற வேண்டுகிறோம்.

கட்டணத்தை M.o அல்லது வரைவோலை (Demand Draft) ஆக உதவி ஆணையர் / செயல் அலுவலர், அருள்மிகு ஆபத்சகாயேஸ்வரர் திருக்கோயில், ஆலங்குடி, வலங்கைமான் வட்டம், திருவாரூர் மாவட்டம் என்ற முகவரிக்கு அனுப்பி பிரசாதம் பெற்றுக் கொள்ளலாம்.

## 09.03.2017 வியாழக்கிழமை மதியம் 1008 சங்காபிஷேகம் நடைபெறும்.

இங்ஙனம்

செ.சிவராம்குமார், பி.எஸ்.சி.,பி.எல்.,
தக்கார் / உதவி ஆணையர்

பா.கலைச்செல்வி,
உதவி ஆணையர் / செயல் அலுவலர்

நிகழ்ச்சி நிரல்

| 02.03.2017 வியாழக்கிழமை | | | |
|---|---|---|---|
| காலை | 9.00 | மணிக்கு | யாகசாலை பூஜை ஆரம்பம் |
| காலை | 10.00 | மணிக்கு | அபிஷேகம் |
| பகல் | 12.00 | மணிக்கு | மகா பூர்ணாஹூதி |
| பகல் | 1.00 | மணிக்கு | பஞ்சமுக அர்ச்சனை, தீபாராதனை |
| மாலை | 6.00 | மணிக்கு | குருவார தரிசனம் |
| இரவு | 7.00 | மணிக்கு | நாதஸ்வர இன்னிசை |

| 09.03.2017 வியாழக்கிழமை | | | |
|---|---|---|---|
| காலை | 9.00 | மணிக்கு | ஹோமம் |
| மதியம் | 1.00 | மணிக்கு | அபிஷேகம் |
| மதியம் | 1.30 | மணிக்கு | பூர்ணாஹூதி |
| மதியம் | 2.00 | மணிக்கு | சங்காபிஷேகம் |
| மாலை | 6.00 | மணிக்கு | தீபாராதனை |

ஆலங்குடி குருபகவான் புகைப்படம் மற்றும் ஸ்தல வரலாறு திருக்கோயில் சீட்டு விற்பனை நிலையத்தில் கிடைக்கும்